# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 23/நகராட்சி/2019**
**நாள் : 26/08/2019**

**திரு சி.ச. சிபி சக்கரவர்த்தி,**
**சிதம்பரம் – 608 001.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**சிதம்பரம் நகராட்சி,**
**சிதம்பரம்.** – **எதிர் மனுதாரர்**

கடலூர் மாவட்டம், சிதம்பரம், மாலைக்கட்டி தெரு, 19–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு சி.ச. சிபிசக்கரவர்த்தி என்பவரின் 08.02.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 23/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக சிதம்பரம் நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் விசாரணையின் போது நகராட்சி ஆணையர் மற்றும் முறையீட்டு மனுதாரர் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், சிதம்பரம், மாலைக்கட்டி தெரு, 19–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு சி.ச. சிபி சக்கரவர்த்தி என்பவர், சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, பிளாக் எண்.5, நகரளவை எண்.300, தெற்கு வீதி, 71– கதவு எண்ணிட்ட கட்டடம் விதிகளுக்கு முரணாகக் கட்டப்பட்டுள்ளது குறித்தும் அதனால் நகராட்சிக்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்புக் குறித்து கீழ்க்காணும் புகார்களைத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) குடியிருப்பு அல்லாதது (Non-Residential) என்ற தவறான தலைப்பில் கட்டட அனுமதி வழங்கியுள்ளது ;

(2) கட்டட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 1137 சதுரடி திறவிடம் இல்லாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது ;

(3) கட்டடம் கட்டப்பட்ட பகுதி 2400 சதுரடிக்கும் கூடுதலாக உள்ளதால் விதிகளுக்கு மாறாக சிதம்பரம் நகராட்சியில் கட்டட அனுமதி வழங்கியுள்ளது ;

(4) கட்டடத்தின் கட்டட அளவை குறைத்துக் காட்டியதால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டது ;

(5) விதிகளுக்கு மாறாகக் கட்டப்பட்டுள்ள இந்நேர்வு சம்பந்தப்பட்ட கட்டடத்தை இடித்து அகற்றவும், முறைகேட்டில் ஈடுபட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. இந்நேர்வு சம்பந்தப்பட்ட கட்டடத்திற்கு தரைதளம் வணிகப் பயன்பாடு எனவும், முதல் தளம் குடியிருப்பு எனவும் குறிப்பிட்டு கட்டட அனுமதி 25.08.2011–இல் வழங்கப்பட்டுள்ளது என்றும், கட்டட அனுமதிக்கு சரியான தொகை வசூலிக்கப்பட்டுள்ளதென்றும், கட்டட அனுமதிக்கு மாறாக தரைதளம் மற்றும் முதல் தளம் முழுவதும் வணிகப் பயன்பாடு கட்டடமாகக் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்குறிப்பிட்ட கட்டடத்திற்கு சொத்துவரி ரூ.51,700/– வசூலிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். எனினும், விதிகள் மீறி கட்டப்பட்ட மேற்குறிப்பிட்ட கட்டடத்திற்கு 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவுகள் 205 (1) (2) மற்றும் 316–இன் கீழ் 28.12.2018 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளதென்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார் .

3. நகராட்சி ஆணையரிடம் 24.07.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போது தனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை உறுதி செய்தார். 1920–ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 205 (1) (2) மற்றும் 316 எண்களிட்ட பிரிவுகளின் கீழ் விதிகள் மீறி கட்டப்பட்ட கட்டடம் சம்பந்தமாக 28.12.2018 அன்று வழங்கப்பட்ட அறிவிப்பிற்கு இதுநாள் வரையும் கட்டட உரிமையாளரிடமிருந்து எந்த பதிலும் வரப்பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

4. முறையீட்டு மனுதாரரிடம் 17.07.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போது தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள விவரங்களை உறுதி செய்ததுடன், விதிகள் மீறி கட்டப்பட்ட மேற்குறிப்பிட்ட கட்டடம் சம்பந்தமாக கட்டட உரிமையாளருக்கு அங்கீகாரம் பெறாத கட்டடத்தை 5 தினங்களுக்குள் அப்புறப்படுத்த அறிவிப்பு வழங்கியும், 6 மாதங்களாக சிதம்பரம் நகராட்சி அவ்வறிவிப்பினைத் தொடர்ந்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், முறைகேடான அங்கீகார கட்டடத்தில் செயல்பட்டுவரும் வங்கியில் வைக்கப்பட்டுள்ள சுமார் ரூ.1000/– கோடி மதிப்பிலான நகை, பணம் மற்றும் ஆவணங்கள் பேரிடர் நிகழ்வுகளால் காப்பீட்டுத் தொகை பெற இயலாத நிலை வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் எனவும் குறிப்பிட்டார். நகராட்சி கட்டட உரிமையாளருக்கு வழங்கியுள்ள 28.12.2018 நாளிட்ட அறிவிப்பு செல்லத்தக்கதாக இல்லை என நகராட்சி ஆணையரிடம் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் விசாரணையின் போது தெரிவித்தார்.

5. இந்நேர்வு சம்பந்தப்பட்ட கட்டடத்திற்கு 25.08.2011 நாளிட்ட 132/2011 எண்ணில் திட்ட அனுமதி நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நாளிலேயே 153/2011 எண்ணில் கட்டட அனுமதியும் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்டுள்ளது. கட்டட அனுமதி குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத பயன்பாட்டிற்கு தரைதளம் மற்றும் முதல் தளத்தில் தலா 950 சதுரடி கட்டடம் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திறவிடம் 1137 சதுரடி எனக்குறிப்பிடப்பட்டு வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் கட்டட உரிமையாளர் தரைதளம் மற்றும் முதல்தளத்துக்கு கட்டடப்பரப்பினை வணிகப்பயன்பாட்டில் பயன்படுத்தப்பட்டு வருவதாக நகராட்சி ஆணையர் உறுதி செய்துள்ளார். மேலும், 2087 சதுரடி நிலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் 1400 சதுரடி பரப்பு வணிகப் பயன்பாட்டிற்கும் 600 சதுரடி பரப்பு குடியிருப்பு பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டு வருவதாக சொத்துவரி விதிப்பு குறிப்பிலிருந்து அறிய முடிகிறது. இந்நேர்வு சம்பந்தப்பட்ட கட்டடம் கட்டட அனுமதிக்கு மாறாகக் கட்டப்பட்டுள்ளது என உறுதியாகிறது. அனுமதிக்குமாறாகக் கட்டப்பட்ட மேற்குறிப்பிட்ட கட்டடத்தினை இடித்து

அப்புறப்படுத்த 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவுகள் 205 (1) (2), 216 (1) (2) மற்றும் 316–இன் கீழ் கட்டட உரிமையாளருக்கு 8 ஆண்டுகள் கடந்து 28.12.2018 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நேர்வில், கட்டட அனுமதி வழங்கப்பட்டு எட்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் அனுமதிக்கு மாறாகக் கட்டப்பட்ட கட்டடத்தை ஆய்வு செய்யத் தவறிய செயல் ஒரு கடமை தவறிய செயலாகவே கருதப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட சிதம்பரம் நகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் / செங்கல்பட்டு மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும், இந்நேர்வில், மேற்படி முறையற்ற கட்டிடத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2019**–ஆம் ஆண்டு, **ஆகஸ்டுத்** திங்கள், **26**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு சி.ச.சிபிசக்கரவர்த்தி,
   எண்.19, மாலைக் கட்டி தெரு,
   சிதம்பரம் – 608 001
   கடலூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   சிதம்பரம் நகராட்சி,
   சிதம்பரம், கடலூர் மாவட்டம்,

3. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
   செங்கல்பட்டு மண்டலம்,
   தாம்பரம்,
   சென்னை – 45.

4. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   இராஜா அண்ணாமலை புரம்,
   சென்னை – 600 028..

5. முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
   பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
   பேரூராட்சி பிரிவு – 3
   இ.கோ. / உதிரி